

தி.மு.க.சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு சார்பில் வேலூரில் நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா மாபெரும் கருத்தரங்கத்தில் பங்கேற்ற அமைச்சர் செஞ்சி மஸ்தானுக்கு சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான் தலைமையில் நினைவுப் பரிசு வழங்கப்பட்டது. இவ் விழாவில் மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார், எம்.எல்.ஏ.,முனைவர் இரா.தி.சபாபதி மோகன் ப.கார்த்திகேயன்,எம்.எல்.ஏ. உள்ளிட்ட சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு நிர்வாகிகள் பலர் பங்கேற்றனர்.

### தேனி வடக்கு - தெற்கு மாவட்ட செயற்குழு மற்றும் -

# கலைஞர் நூற்றாண்டு விழா மாபெரும் பொதுக்கூட்டம்!

### அமைச்சர் ஐ.பெரியசாமி - கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி சிறப்புரை

தேனி, அக்.18-

தேனி தெற்கு மாவட்டச் செயலாளர் கம்பம் நா.இராமகிருஷ்ணன், எம்.எல்.ஏ. மற்றும் தேனி வடக்கு மாவட்டச் செயலாளர் தங்க.தமிழ்ச்செல்வன், ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தேனி வடக்கு மற்றும் தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு பெரியகுளம் வடக்கு ஒன்றியம் வடுகபட்டி பேரூராட்சியில் கலைஞர் திடலில் மாபெரும் பொதுக்கூட்டம் நாளை (19.10.2023-வியாழக்கிழமை) மாலை 6 மணி அளவில்; நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் கழக துணைப் பொதுச் செயலாளரும் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சருமான ஐ.பெரியசாமியும், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதியும் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றவுள்ளனர்.அதற்கு முன்பாக மாலை 4 மணி அளவில் தேனி என்.ஆர்.டி. மஹாலில் தேனி வடக்கு மற்றும் தெற்கு மாவட்டச் செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறவுள்ளது.

இக்கூட்டங்களில் மாநில, மாவட்டக்கழக நிர்வாகிகள், செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கிளைக்கழக செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள் மற்றும் நிர்வாகிகள், இளைஞரணி உள்ளிட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரும் பெருந்திரளாக பங்கேற்க வேண்டுமென்று தேனி வடக்கு மற்றும் தெற்கு மாவட்டக் கழகம் சார்பாக கேட்டுக் கொள்கிறோம்.

பொருள்:

1.மாநில இளைஞர் அணிச் செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் தேனி மாவட்ட வருகை குறித்து.

2.அக்டோபர், 25ஆம் தேதி தேனி மாவட்டம் கம்பம் நகரில் கம்பம்.நா. நடராஜன் நினைவு திரு மண மண்டபத்தில் கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழிகள் வழங்குதல் குறித்து.

3.கம்பம் மற்றும் தேனி நகரில் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு வாசக சாலை திறந்து வைத்தல் குறித்து.

4 தேனி நகரில் கம்பம் ரோட்டில் இளைஞர் அணி செயல் வீரர்கள் கூட்டம் நடைபெறுவது குறித்து.

இவ்வாறு அவர்கள் அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

### தஞ்சை வேளாண் கல்லூரிக்கு எம்.எஸ்.சுவாமிநாதன் பெயர்!

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு குடும்பத்தினர் நன்றி!

### மகத்தான அஞ்சலி என புதல்வி சவும்யா சுவாமிநாதன் பாராட்டு!

சென்னை, அக்.18-

தஞ்சை வேளாண் கல்லூரிக்கு வேளாண் விஞ்ஞானி எம்.எஸ். சுவாமிநாதன் பெயர் வைத்ததற்கும், அவர் பெயரில் வேளாண் மாணவர்களுக்கு விருதுகள் அறிவித்ததற்கும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு எம்.எஸ்.சுவாமிநாதன் குடும்பத்தார் சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்வதாக அவரது புதல்வி சவும்யா சுவாமிநாதன் தெரிவித்துள்ளார். தமது தந்தைக்கு தமிழ்நாடு அரசு மகத்தான அஞ்சலி செய்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



இது குறித்து வேளாண் விஞ்ஞானி மறைந்த எம்.எஸ். சுவாமிநாதன் அவர்களின் மகள் டாக்டர் வி.சவும்யா சுவாமிநாதன் காணொலி யில் தெரிவித்துள்ளதாவது:

தஞ்சாவூர் ஈச்சங்கோட்டையில் உள்ள அரசினர் வேளாண் கல்லூரிக்கு எங்கள் தந்தை டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் பெயர் சூட்டப்படும் என்று தமிழ்நாடு சட்டப் பேரவையில் மரியாதைக்குரிய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான அரசு தீர்மானம் நிறைவேற்றி அறிவித்திருப்பதை அறிந்து எங்களது குடும்பத்தினர் மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தனர்.

அது மட்டுமன்றி வேளாண் கல்லூரியில் தகுதி வாய்ந்த மாணவர்களுக்கு அவர் பெயரில் விருது வழங்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் சட்டப் பேரவையில் அறிவிப்பு வெளியிடப்பட்டிருப்பதும் எங்கள் குடும்பத்தினருக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

தம் வாழ்நாள் முழுமைக்கும் வேளாண்துறையில் தம்மை அர்ப்பணித்துக் கொண்ட எங்களது தந்தையாருக்கு தமிழ்நாடு அரசு அளித்துள்ள மகத்தான அஞ்சலி இது என்றே நான் கருதுகிறேன்.

இந்த நாட்டின் உணவு சத்துணவு, பாதுகாப்பு உள்ளிட்ட வேளாண் சம்பந்தப்பட்ட துறைகளில் அளப்பரிய பணிகள் ஆற்றியதுடன், அறிவியல் கல்வியில் அதிக நாட்டம் கொண்டு அதை முறைப்படி இளைய தலைமுறைக்கு வழங்குவதில் ஆர்வம் கொண்டவராக இருந்தார்.

இந்தியாவில் உள்ளவர்கள் அறிவியல் துறையில் சிறந்து விளங்க வேண்டும் என்று வாழ்நாள் முழுவதும் வலியுறுத்தி வந்தவர், தமிழ்நாடு அரசு மேற்கொண்டு வரும் நடைமுறைகளை அரிய வாய்ப்பு பெற்றவராக இருப்பின் உள்ளபடியே மிகுந்த மகிழ்ச்சி அடைந்திருப்பார்.

மிக உயரிய கொள்கைகளுடன் வாழ்ந்தவர்கள் பற்றிய வரலாறுகளை இளந்தலைமுறையினர் படித்துத் தெரிந்துகொள்ள அரசு மேற்கொண்டு வரும் செயல்கள் வெகுவாகப் பாராட்டுக்குரியதாகும்.

பல்வேறு சாதனைகளை புரிந்தவராக இருப்பினும், மறைந்த எங்கள் தந்தையார் மிகவும் அடக்கமானவர். சமுதாயத்தில் அதிர்ஷ்டமற்றவர்கள் எனப்படும் அடித்தட்டு மக்களிடம் இரக்கம் கொண்டவர் என்பதோடு அவர்கள் மீது எப்போதும் அனுதாபத்துடன் இருந்தவர்.

அவரது வாழ்க்கையில் அவர் செயல்படுத்திய சாதனைகள் மூலம் நாங்கள் பெருமை அடைகிறோம். எங்கள் குடும்பம் சார்பில் எங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியாக இருக்கிறது. டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் பெயர் தஞ்சை ஈச்சங்கோட்டையில் உள்ள வேளாண் கல்லூரிக்கு சூட்டப்பட்டுள்ளது மாணவர்களுக்கு பரிசுகள் அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்காக நாங்கள் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு எங்கள் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

இது எங்களது தந்தை டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்களுக்கு தமிழ்நாடு அரசின் தலைசிறந்த அஞ்சலி யாகும்.

இவ்வாறு டாக்டர் சவும்யா சுவாமிநாதன் தெரிவித்துள்ளார்.

### சு.சுப்பிரமணியன் தலைமையில்

# நெல்லை மாநகர செயல்வீரர்கள் கூட்டம்!

### கழக முன்னணியினர் பங்கேற்றனர்

நெல்லை.அக்.18.

நெல்லை மாநகர கழக செயல் வீரர்கள் கூட்டம் நெல்லை டவுன் லட்சுமி மகாலில் மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் தலைமையில்

பகுதி செயலாளர்கள் பூ.சுப்பிரமணியன் (தச்சை) அன்டன் செல்லத்துரை(பாளை) மாநகர துணை செயலாளர் அப்துல் கையூம்,நெல்லை மத்திய மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் பொன்னையா பாண்டியன்,மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர் அலிப்ஃ மீரான்ஆகியோர் முன்னிலை யில் நடைபெற்றது. நெல்லை பகுதி செயலாளர் நமச்சிவாயம் என்ற கோபி வரவேற்புரையாற்றினார். தலைமை கழக பேச்சாளர் நெல்லை முத்தையா நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார்.

தீர்மானத்தை மாநில நெசவாளர் அணி செயலாளர் சொ.பெருமாள் வாசித்தார்.

இந்நிகழ்வில் மாநில நெசவாளர் அணி துணை செயலாளர் நெல்லை தொகுதி பார்வையாளர் வசந்தம் ஜெயக்குமார் பங்கேற்று கருத்துக்களைக் கேட்டு ஆலோசனை வழங்கி பேசினார்.

நிகழ்வில் கழக தீர்மானக் குழு உறுப்பினர் சுப.சீதாராமன்,கழக மூத்த முன்னோடி குமாரசுப்பிர மணியன், மத்திய மாவட்ட அவைத் தலைவர் முருகன்,துணை செயலாளர் சுரேஷ், மாநகர துணை செயலாளர் சுதா மூர்த்தி துணை மேயர் கே.ஆர்.ராஜ், மானூர் தெற்கு ஒன்றிய செயலாளர் மாரியப்பன்

இளைஞர் அணி அலிப் மீரான், இனியன்,செல்வம்,அன்பழகன்,ரவி, மாயா செந்தில்,சார்பு அணி நிர்வாகிகள் சவுந்தரம்,பத்மா,சித்திக்,அவதார் ஷாஜகான்,ரகுமான்ஷா, ஷெட்டி, பெரியார் ,வினோத்,முத்து, பெப்சி சரவணன்,தளபதி ஆறுமுகம்,டைட்டஸ் கண்ணன்,சுரேஷ்குமார்,சாகிர் உசேன், ஸ்டார் அப்துல்,சிவக்குமார்,நர்மதா, பிந்து,ஆனிரேக்லண்ட்,சுப்புலட்சுமி, ஷெர்லி,சக்திவேல், செல்வகணேஷ், கணேசன், வெங்கடேஷ்,கோட்டூர் மீரான்,

எல்.ஐ.சி.பேச்சிமுத்து, மாவட்ட பிரதிநிதி வேங்கை வெங்கடேசன், ஜவகர்,வட்ட செயலாளர்கள் சடாமுனி,சிந்து முருகன், மனோகர், பத்மராஜ், அகமது ரகுமத்துல்லா, ராஜ்,கோட்டூர் செய்யது,பாப்புகுமார், மேகை செல்வம்,பிரேம் கணேசன், ராஜன்,புயல் மீனாட்சி, அருள்,மாரிமுத்து, கேபிள் குமரேசன், தென்கரை முத்து, கிச்சு என்ற கிருஷ்ணன், ஆறுமுகம், கதிரேசன், சுப்ரீத், அருள் இளங்கோ,பேபி கோபால், ஜெயின் உசேன், ஆவின் கல்யாணி,பால மகேஷ்,செல்வகுமார், கிங் பாலா,ஜாய் மரகதம், முறுக்கு சாகுல், தொப்பி காஜா, ராபர்ட் செல்லையா, அந்தோணி,ஜான் கென்னடி, பொர்க்மான் பாஸ்கர், இசக்கி,அகமது,பாதுஷா, மெடிக்கல் பாஸ்கர்,ஆறுமுகம்,ஆனந்த பெருமாள்,சிவ ஐயப்பன்,உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு.

முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கடந்த செப்டம்பர் மாதம் 23ஆம் தேதி முதல் அக்டோபர் மாதம் 8ந் தேதி வரை சீனாவில் நடைபெற்ற ஆசிய விளையாட்டு தொடரில் பதக்கங்கள் வென்ற தமிழ்நாட்டு வீரர்களுக்கு ரூபாய் 9.40 கோடி ஊக்கத்தொகை வழங்கி பாராட்டியதற்கு நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தமிழ்நாட்டு இளைஞர்களையும், விளையாட்டு வீரர்களையும் ஊக்கப்படுத்தி விளையாட்டு துறையில் மறுமலர்ச்சி ஏற்படுத்தி வரும் கழக இளைஞர் அணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்ச உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அக்டோபர் 14ஆம் தேதி ஒட்டு மொத்த இந்தியாவே வியக்கும் வகையில் முதலமைச்சர் தளபதியார் அவர்களின் தலைமையில் அகில இந்திய பெண் தலைவர்களை விருந்தினராக அழைத்து முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மாபெரும் மகளிர் உரிமை மாநாடு நடத்திய,கழக துணை பொது செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி அவர்களுக்கும், கழக மகளிர் அணி செயலாளர் ஹெலன் டேவிட்சன் அவர்களுக்கும் நன்றி தெரிவிப்பது என்றும்.

சிறுபான்மை மக்கள் கூட்டணி கட்சித் தலைவர்கள் மற்றும் சமூக நல ஆர்வலர்கள் ஆகியோரின் கோரிக்கையின் படி தண்டனைக் காலம் முடிந்த பிறகும் 20 ஆண்டுகளுக்கும் மேலாக சிறையில் இருக்கும் இஸ்லாமிய சிறை கைதிகைகளை சட்டப்படி விடுதலை செய்வதற்கு ஆளுநருக்கு பரிந்துரை செய்த முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவிப்பது என்றும்.

லட்சக்கணக்கான சிறு, குறு வணிகர்களின் வாழ்வில் ஒளி ஏற்றும் விதமாக சமாதான திட்டத்தின் மூலம் ரூபாய் 50,000 த்துக்கும் குறைவாக வரி, வட்டி, அபராத தொகை செலுத்த வேண்டிய வணிகர்களுக்கான நிலுவைத் தொகையை முற்றிலும் தள்ளுபடி செய்யப்படும்.என சட்டமன்றத்தில் அறிவித்த முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவிப்பது என்றும்.

வருகிற 27102023 வெள்ளியன்று நெல்லையில் கழக இளைஞர் அணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பொற்கரங்களால் கழக முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கும் நிகழ்ச்சி மற்றும் இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டத்தில் பெரும் திரளாக கலந்து கொண்டு நிகழ்ச்சியை சீரும் சிறப்புமாக நடத்துவது என்றும்.

2006 ஆம் ஆண்டு திருநெல்வேலியில் முதலமைச்சர் அவர்களின் தலைமை நடைபெற்ற கழக இளைஞரணி முதல் மாநாடு கழகத்தின் திருப்புமுனையாக அமைந்தது. அதேபோல் கழக இளைஞர் அணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையில் வரும் டிசம்பர் மாதம் 17ஆம் தேதி சேலம் மாவட்டத்தில் நடைபெற உள்ள இளைஞர் அணி இரண்டாவது மாநில மாநாட்டில் பெரும் திரளாக கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டும் என்றும்.

முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் ஆணையின்படி 40 ம் நமதே நாடும் நமதே என்பதை நிறைவேற்ற திருநெல்வேலி நாடாளுமன்ற தொகுதியில் கழகத் தலைவர் அவர்களால் அடையாளம் காட்டப்படும் வெற்றி வேட்பாளரை தமிழ்நாட்டிலேயே அதிக வாக்குகள் வித்தியாசத்தில் அமோக வெற்றி பெறசெய்ய இரவு,பகல் பாராது உழைக்க வேண்டும் என்றும்.

வருகின்ற 2024 ஆம் ஆண்டு நாடாளுமன்ற பொது தேர்தலுக்கு தயாராகும் வகையில் கழகத் தலைவர் அவர்களின் உத்தரையின்படி வாக்காளர் பட்டியல் பெயர் சேர்த்தல் நீக்கல் மற்றும் திருத்தல் பணிக்காக வரும் நவம்பர் மாதம் 04.11.2023, 05.11. 2023,18.11.2023,19.11.2023 ஆகிய தேதிகளில் நடைபெற இருக்கும் சிறப்பு முகாமில் நெல்லை மாநகரத்திற்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள அனைத்து வாக்காளர்களின் பெயர்களும் வாக்காளர் பட்டியலில் தவறாமல் இடம்பெறச் செய்ய வேண்டும் என்றும்

தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.



வேடசந்தூர் சட்டமன்றத் தொகுதி வடமதுரை பேரூராட்சி வாக்குச்சாவடி முகவர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் தொகுதி பொறுப்பாளர் கோவை நாச்சிமுத்து, ஒன்றிய செயலாளர் சுப்பையா வடமதுரை பேரூர் செயலாளர் கணேசன், அரியலூர் பேரூர் செயலாளர் கருப்பன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# நாகர்கோவில் வடசேரி, கிருஷ்ணன்கோவில், சுப்பையார் குளம் பகுதிகளில் ஆய்வு!

### மாவட்டச் செயலாளர் - மேயர் ரெ. மகேஷ் மேற்கொண்டார்!

குமரி, அக்.18-

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், நாகர்கோவில் மாநகராட்சி, 14வது வார்டுக்கு உட்பட்ட வடசேரி, கிருஷ்ணன்கோவில், சுப்பையார் குளத்தில் நேற்று (17.10.2023, செவ்வாய்கிழமை) காலை 7 மணி முதல் 9 மணி வரை கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ. மகேஷ் ஆய்வு மேற்கொண்டார்.

அண்மையில் சுப்பையார்குளத்தை ரூ.47 லட்சம் செலவில் தூர்வாரப்பட்டு சீரமைக்கப்பட்டுள்ளது. சுப்பையார் குளத்தில் அப்பகுதியில் உள்ள கழிவு நீரோடை யிலிருந்து கழிவு நீர் கசிந்து குளத்திற்குள் வருவது தெரியவந்தது. அதை சீரமைக்க வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை வைத்தனர். இது தொடர்பாக மாநகராட்சி மேயர் அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொண்டு உடனடியாக அதனை சீரமைத்து, கழிவு நீரோடையை சுத்தம் செய்து அப்பகுதியில் கழிவு நீர் தேங்காதவாறு பார்த்துக் கொள்ளவும் அறிவுறுத்தினார். நாகர்கோவில், வடசேரி, கிருஷ்ணன்கோவிலில் உள்ள குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து கால்வாய் வழியாக வரும் நீரில், கழிவுநீர் கலந்து வருவதால், அந்த தண்ணீர் சுப்பையார் குளத்திற்கு வராமல் தடுக்கப்பட்டுள்ளது. தற்போது குழாய் மூலம், குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் இருந்து சுப்பையார் குளத்திற்கு தண்ணீர் கொண்டு வர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த பணிக்காக ரூ. 23 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. குளத்தைச் சுற்றி நடைபாதைகள் அமைக்கவும், மேலும் குளத்தின் சட்டரை சீரமைக்கவும் நடவடிக்கை அருந்ததியர் காலனி பகுதியில் உள்ள கழிவுகளை மேற்கொள்ளப்பட்டுள்ளது. வெளியேற்றுவது குறித்தும் ஆலோசிக்கப்பட்டுள்ளது.

ஆய்வில் மாநகராட்சி பொறியாளர் பாலசுப்பிரமணியன், மாநகர நல அலுவலர் டாக்டர். ராம் குமார், நகரமைப்பு ஆய்வாளர் சந்தோஷ், சுகாதார ஆய்வாளர் மாதவன்பிள்ளை, மண்டல தலைவர் ஜவகர், மாமன்ற உறுப்பினர் திருமதி. கலா ராணி உட்பட கழக நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.

### வேடசந்தூர் சட்டமன்றத் தொகுதி வடமதுரை பேரூர் கழகத்தின் சார்பில்

# வாக்குச்சாவடி குழு உறுப்பினர் ஆலோசனைக் கூட்டம்!

திண்டுக்கல், அக்.18-

திண்டுக்கல் மேற்கு மாவட்டம் வேடசந்தூர் சட்டமன்றத் தொகுதி வடமதுரை பேரூர் கழகத்தின் சார்பில் வாக்குச்சாவடி குழு உறுப்பினர் ஆலோசனைக் கூட்டம் வடமதுரையில் உள்ள தனியார் மஹாலில் நடைபெற்றது. கூட்டத்திற்கு தேர்வு செயலாளர் கணேசன் தலைமை வகித்தார்.

அய்யலூர் மற்றும் வடமதுரை வேல்வார்கோட்டை காணப்பாடி சிங்காரக் கோட்டை வேலாயுதம்பாளையம் ஆகிய ஊராட்சிகளை சேர்ந்த வாக்குச்சாவடி பாகநிலை முகவர்கள் மற்றும் பூத் கமிட்டி உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் பாராளுமன்ற தேர்தல் குறித்த பயிற்சிகள் மற்றும் தேர்தலை எதிர்கொள்ளும் முறைகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் வடமதுரை ஒன்றிய கழக செயலாளர் சுப்பையன், தொகுதி பொறுப்பாளர் கோவை நாச்சிமுத்து சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கினார்.

வடமதுரை பேரூராட்சி தலைவர் நிருபா ராணி கணேசன், அய்யலூர் பேரூர் கழகச் செயலாளர் கருப்பன் மற்றும் மாணவரணி செயலாளர்கள், ஒன்றிய கவுன்சிலர்கள் ஒன்றிய, பேரூர், நகர கிளைச் செயலாளர்கள், வாக்குச்சாவடி முகவர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



நாகர்கோவில் மாநகராட்சி, வடசேரி, கிருஷ்ணன்கோவில், சுப்பையார் குளத்தில் கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் – மாநகராட்சி மேயர் ரெ. மகேஷ் கள ஆய்வு மேற்கொண்டார்.